# காந்தீயம்

விலை சதம் 10

**தொண்டு**

தொண்டு தான் உண்மை அன்பைக் குறிக்கும்; வாய்ச் சொல்லல்ல

—காந்திஜி

மலர் 12 காந்தி நிலையம்-உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 ஆகஸ்ட் | இதழ்—10


## அனைவருக்கும் நல்வாழ்வு

# அருளும் சர்வோதயம்

அரசியல் உலகில் இதுவரை பல கொள்கைகளும் கோட்பாடுகளும் தோன்றியுள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றையும் எடுத்து நன்கு ஆராய்ந்தால் அவற்றின் சாரம் பின்வருமாறு தான் இருக்கும். ''அதிகப்பட்ட பேருக்கு அதிக பட்சம் நன்மை.

(GREATEST GOOD TO THE GREATEST NUMBER)

சமயம், மொழி, இனம், அரசியல் கட்சிகள் என்பன போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் அதெல்லாம் ஒரு சார்புடையதாகவே விளங்குவதை அறியலாம்.

சமய வளர்ச்சி மன்றங்கள் அந்தந்த சமயங்களைச்சிறந்தெனவென்றும்அவற்றிற்குப் பணியாற்றுவதே சாலச் சிறந்த பணியென்றும் கொண்டு அதன் வளர்ச்சிக்கே பாடு படுவார்கள். தம் சமயத்தைச் சாராதவர்களெல்லாம் தம்மைவிட மட்டமானவர்களென்றும் கருதுவார்கள்.

மொழியை எடுத்துக் கொண்டாலும் அப்படியே. இனத்தவர்கள் நல உரிமைக்காகப் பாடுபடுவர்களும் சார்புடையவர்களேயாவார்கள். நாட்டுப்பற்று வெறியாகும் போதும் பிற நாடுகளின் மேல் அன்பிற்குப் பதில் காய்ப்புத்தான் மேவிடும். பொருளாதாரக் கோட்பாடுகளில் பல திறப்பட்ட விற்பனர்களும் தமது கொள்கையே உலகை உய்விக்க வல்லது என்று கருதி அந்தக் குறிக் கோளுக்காக உயிரையும் விடச் சித்தமாயிருப்பார்கள்.

இவற்றுள் ''சமதர்ம சமுதாயம் சமைப்போம் வாரீர்!'' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களின் கொள்கையையும் ஆழ்ந்து ஆராய்ந்தால் அதன் முடிவு அதிகமான பேர்களுக்கு அதிக அளவு நயம் பயப்பதே அவர்களது குறிக்கோளாக விளங்குவதை அறியலாம். இதில் வர்க்க பேதம், வர்க்கப்போராட்டம்இன்னோரன்னபிற இன்னல்களும் குறுக்கிடும், அதில் வலுவுள்ளவர்கள் வலுவற்றவர்களைவென்று பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை அமைப்பார்கள். அப்படிப்பட்ட முழு வலுவுள்ள ஒரு ஆதிபத்தியத்தை அமைப்பதற்கு ஒருசிலரை - ஏன் - ஒரு வர்க்கத்தையே(முதலாளி வர்க்கத்தையே) அழிப்பது பாவமல்ல என்பது அவர்களது கோட்பாடு, அழிப்பது பாபமல்ல என்பதோடு மட்டுமல்லாமல் முதலாளிகளை ஒழித்து விட்டுத்தான் புதிய சமுதாயம் உருவாகும் என்று பிடிவாதமாக நம்புகிறார்கள்.

இந்த சமதர்ம சமுதாயக் கொள்கைக்கு மாறு பட்ட பிற தொருகொள்கை என்னவெனில் அது தனியுடைமை சமுதாயக்கொள்கையாகும். இக் கொள்கையினர் எண்ணிக்கையில் சொற்பப்பேராக மட்டும் இருந்தாலும் ஆதிபத்தியம் முழுவதும் இவர்கள் கையிலேயே இருந்து வருகிறது. இவர்களுடைய நம்பிக்கை என்னவெனில் '' ஆண்டவன் படைத்தான், எங்கிட்டே கொடுத்தான், அனுபவிராஜான்னு அனுப்பி வச்சான்'' என்ற பாவனையில் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் உலகத்தில் பொருளுள்ளவன் -இல்லாதவன் என்ற நிலைமை நீடித்தால் தான் இவர்களுடைய கொள்கை நிலைக்கும்.

இப்படிப்பட்ட புதிர் நிறைந்த யுகத்தில் அண்ணல் காந்தியடிகள் புதியதோர் சித்தாந்தத்தைக் கண்டு பிடித்தார்கள். தன்னிகரற்ற அந்தக் கொள்கையின் பெயர் ''சர்வோதயம்.'' இதன் பொருள் '' அனைவருக்கும்'' நல் வாழ்வு (WELFARE OF ALL)

அனைவருக்கும் நல்வாழ்வு எவ்வாறு தொடங்க வேண்டும் என்பதைக் காந்தியடிகள் முதலில் தெரிந்து கொண்டது ஜான்ரஸ்கின் எழுதிய ''கடையனுக்கும் கடைத்தோற்றம்'' (UNTO THIS LAST) என்ற நூலைப் படித்த பிறகே யாகும். அந்த நூலில் ஒரு கதை வருகிறது: அது கீழ் வருமாறு:

திராட்சைத் தோட்டத்தின் கதை (பைபில் மத்தேயு 20 ஆம் அத்தியாயம்)

1. பரலோக ராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் தன் திராட்சைத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான்.

2. வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி அவர்களைத் தன் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினான்.

3. மூன்றாம் மணி வேளையிலும் அவன் புறப்பட்டுப் போய் கடைத் தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு:

4. ''நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி உங்களுக்கும் கூலி கொடுப்பேன்'' என்றான். அவர்களும் போனார்கள்.

5. மறுபடியும் ஆறும், ஒன்பதாம் மணி வேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான்.

6. பதினோராம் மணி வேளையிலும் அவன் போய் சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு, ''நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன'' என்று கேட்டான்.

7. அதற்கு அவர்கள், ''ஒருவரும் வேலையிடவில்லை'' என்றார்கள். அவன் அவர்களை நோக்கி ''நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி கூலி பெற்றுக் கொள்வீர்கள்'' என்றான்.

8. சாயங்காலத்தில் தன் காரியக்காரனை நோக்கி ''நீ வேலையாட்களை அழைத்து பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு'' என்றான்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 105
1975 ஆகஸ்ட்

# செல்வம்

சென்ற இரண்டு இதழ்களிலும் சிந்தனை இன்பம், சமத்துவம் என்ற பொருள்கள் பற்றி எழுதியிருந்தோம். இப்பொழுது இவை இரண்டையும் இணைத்து நோக்குவோம். சிந்தனையும் உளப்பாங்குமே சமத்துவத்திற்கு அடிப்படை என்பதைக் கண்டோம். செல்வத்தை இந்தக்கருத்தோடு பொருத்திப் பார்ப்போம்.

பொருளாதாரக் கல்வியில் ஒரு ''நாட்டின் மொத்த உற்பத்தி'' என்பது பற்றிய ஒரு துறை வருகின்றது. உலக நாடுகளின் செல்வ நிலைமையை இந்த மொத்த உற்பத்தியின் பெறுமானங்கொண்டு அளக்கிறனர். ஆண்டுதோறும் இந்தப் பெறுமானம் எவ்வளவு சதவீதத்தில் உயர்கிறதென்பதைக் கொண்டே ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் கணித்தனர். அபிவிருத்தியடைந்த நாடுகள், அடையும் நாடுகள் எல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிரூட்டிகள், பல்வகை உண்கலங்கள், உயர்வகைக்கார்கள், பகட்டுடைகள் இவற்றை உற்பத்திசெய்து தம் வீடுகளை நிறைப்பதிலேயே கண்ணும் கருத்துமாயுள்ளன. ஆனால் இவை விலைமதிப்பால் ஒரு வீட்டின் குடும்பத்தின் தரத்தை உயர்த்துகின்றனவே அன்றி அக்குடும்பங்களின் 'மனநிறைவை' உயர்த்துகின்றனவா என்பது பற்றி இப்பொழுது தான் ஐக்கிய நாட்டு அவையினர் சிந்திக்கத் தொடங்கி உள்ளனர். ஒரு நாட்டின் வளம் அது உற்பத்தி செய்யும் பொருள்களிலன்றி அப்பொருள்கள் மக்களுக்கு அளிக்கும் நற்பயன், தீப்பயன் ஆகியவற்றின் கூட்டுப் பயனில் தங்கியுள்ளது என்பதை ஆராய்ச்சியாளர் உணரத்தொடங்கி உள்ளனர். எனவே இப்பொழுது, நாட்டின் செல்வம் அந்நாட்டின் சடப்பொருள் உற்பத்தித் திறனில் அன்றி அப் பொருள்கள் கொண்டுவரும் விளைபயனில் தங்கியுள்ளது என்பதையும் அறியத் தொடங்கி உள்ளனர். அதாவது செல்வம் பொருள்கணியங்களி (எண்ணிக்கைகளி) லன்றி குணப்பண்புகளில் தங்கியுள்ளது என்பதை பொருளியலாளர் உணரத் தொடங்கியுள்ளனர்.

எனவே நாட்டின் செல்வம், வீடுகள், கட்டிடங்கள், தளபாடங்கள், உபகரணங்களிலன்றி, மக்களின் சுகாதாரம், அமைதி வாழ்வு, ஆகியநேர்முறைப் பண்புகளிலும், வீண் ஓசை, அழுக்குச் சுற்றுடல், நீர்நிலைக்கேடு, அசுத்தக்காற்று முதலிய எதிர்முறையான கேடுதரும் பண்புகளிலும் தங்கியுள்ளது என்பது தெளிவாகும். ஏராளமான, பலவிதமான நுகர் பொருள்களை ஆக்கிக்குவித்து மிகைபடப் பகட்டு வாழ்வு முறையில் நுகர்ந்து கேடான சூழலில், வாழ்வதில் என்ன பயன்? நுகர நுகர இன்னும் இன்னும் வேண்டும் என, ஆக்கி ஆக்கிக் குவிக்கும் பொருட் செல்வத்தால் என்ன பயன்? மேலும் மேலும் பதற்றமும் அங்கலாய்ப்பும் உயர்ந்து உயர்ந்து செல்லுமே அன்றி மன நிறைவு உண்டாகுமா?

இதை நினைத்தே பொருளியலாளரில் புதிய சிந்தனையாளர் ''நாட்டின் மொத்த உற்பத்தி'' எனும் கருத்து அளவை முறையைக் கைவிட்டு, ''தேறிய பொருளாதார நல்வாழ்வு'' எனும் முறையில் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளக்கத் தொடங்கி உள்ளனர். அதாவது ஆக்கப்பட்ட பொருள்களின் பெறுமதிகள் சகமுறைப் பெறுமானமாகவும் ஆக்குவதில் ஏற்படும் பதற்றநிலை, சூழல் அழுக்கு, சுகாதாரக் கேடு முதலியவை சயமுறைப் பெறுமானங்களாகவும் கணிக்கப் பெறும். உதாரணமாக ஒரு வீட்டில் உள்ள மனைவி ஓர் அலுவலகத்தில் வேலை செய்து பெறும் பொருள் வருவாய் சகமுறைப் பெறுமானமாயிருக்க, வீட்டில் பிள்ளைகள் ஒழுங்கு முறையாக வளர்க்கப் படாது போனால் அது சயமுறைப்பெறுமானமாக இருக்கும். இவ்விடத்தில் நம் தமிழ் அறிஞர்கள் வறுமைபற்றிக் கூறிய வரைவிலக்கணம் ஒன்றை நினைவு படுத்திக் கொள்ளல் பயனுடையது.

வறுமை என்றால் என்ன? என்பது கேள்வி. ''போகம் துய்க்கப்பெறாது பற்றுள்ளம்'' என்பது பதில். ஏதேனும் அனுபவித்துக்கொண்டே இன்னும் அனுபவிக்க முடியவில்லையே, அனுபவிக்கமுடியவில்லையேயென்று மேன்மேலும் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளமே வறுமை நிலை என்பது கருத்து. நுகர நுகரப் பொருளாசை கூடவும் அது கிடைக்கப் பெறமுடியாமலிருக்கும் நிலைமையே வறுமை; இதிலிருந்து நாம் அறிவது என்ன? செல்வம் என்பது பொருட்குவியல் அல்ல ஆயின் இனிப்போதும் என்று அமையும் மனம் என்பது புலப்படும்.

இந்தக் கருத்து ஐக்கிய நாட்டுப் பொருளியலாளரையும் இப்பொழுது கவர்ந்துள்ளது. போகம் அநுபவிக்கப் பெறாத பற்றுள்ளம், செல்வம் உள்ளவரிடத்தும் இருக்கும்; செல்வம் இல்லாதவரிடத்தும் இருக்கும். எனவே வறுமை என்பது மனத்தின் ஒரு குணவிசேடம். என்பது புலப்படும். இந்த அறிவின் பயனாய் இப்பொழுது அவர்கள் ஒரு நாட்டின் செல்வநிலைமையை அளப்பதற்கு, அந் நாட்டின் மக்களது மனமகிழ்ச்சி நிலையை அளவிட முயன்று வருகிறார்கள். மகிழ்ச்சி என்பது ஒரு குணப்பண்பு. அதை எப்படி எண்முறைபடுத்தி அளக்கலாம் என்பது கேள்வி. ஆராய்ச்சியின் பயனாக இதற்கு ஒரு முடிவு காண முடியும்.

இவ்விடத்திலும் நம்தமிழறிஞர்கள் சொன்னஒரு கருத்து மிகமிகப்பொருத்தமானதாகும். ''சிந்தையின் நிறைவே செல்வம்'' என்பதுஅவர் கருத்து. இயந்திரங்களால், தொழிலாளர்களால், பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு சமூகத்தில் ஒரு பகுதியினரிடம் மட்டும் அடங்கி இருந்து விட்டால், ஒரு சிலரே அதனால் பயனும் மகிழ்வும் பெறுவர். அது செல்வமாகாது. பெரும்பான்மையோர் கசப்பும் விரக்தியும் பெறுவர். எனவே பொருள் குவியல் மட்டுமன்றி பொருள் விநியோக முறையுமே செல்வம், வளர்ச்சி ஆகியவற்றின் பாற்படும்.

சந்திரனில் அடி எடுத்து வைத்து உலாவலாம். வெறும் ஆகாய வெளியில் நடக்கலாம். இந்தப் பூமியையே சந்திரனாக்கலாம். தாங்க முடியாத வெப்பத்துக்குள்ளாகத் தப்பிப் பிழைத்துக் கடலுள் முழுகி எழலாம். இதற்குரிய சாதனங்கள் எல்லாவற்றையும் கட்டி எழுப்பலாம். ஆனால் இவ்வாறு செய்தவர்களின் நாட்டு மக்களது சராசரி மகிழ்ச்சி மனநிலை உயர்ந்து விட்டதா? மகிழ்ச்சி நிலைக்கு மாறான நிலையையே நாம் காண்கிறோம்.

கண் மூடி மௌனியாய்ச் சும்மா இருப்பது தான் நம் நோக்கமன்று. ஆயின் நுகரும் ஆசையைக் கட்டுப் படுத்தி, காகங்கள் போல உறவுகலந்து நுகரப் பழகினோமானால் அதுவே உண்மையான செல்வமாகும்.

—இ.இ

# கருத்தரங்கும்

## சர்வோதய ஊழியர்

## சந்திப்பும்

மகாத்மா காந்தி அடிகளின் சர்வோதய தத்துவத்தை மக்களிடையே பரப்பி சர்வோதய நற்சமுதாயத்தை அமைக்கும் நோக்கமாக நாடு முழுவதும் கருத்தரங்குகளை நடத்த அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் தீர்மானித்ததற்கமைய 1975 செப்ரெம்பர் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கருத்தரங்கு நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் 24. 08. 75 ஞாயிறு மு. ப. 10 மணியளவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் திரு. ச. அ. டேவிட் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. அத்தருணம் திரு. த. நல்லதம்பி கருத்தரங்கத்தின் அவசியம் பற்றி விளக்கினார்.

கருத்தரங்கை ஒழுங்கு செய்வதற்கு பின்வரும் குழுவினர் தெரிவு செய்யப் பெற்றனர்.

**அமைப்பாளர்:**

திரு. த. நல்லதம்பி

திரு. த. நல்லையா

திரு. ச. அருணானந்தம்

திரு. எஸ். இராசசுந்தரம்

**பிரசாரம்:**

திரு. த. ம. தெய்வேந்திரன்

திரு. மூ. மாலி

## வன்னித்தம்பி நினைவு நிதி

யாழ்ப்பாணம், மாதகலூர் உயர் திரு. சிற்றம்பலம் - வன்னித்தம்பி அவர்கள் அமரத்துவமடைந்து (5. 09. 75 இல்) நான்கு ஆண்டுகளாகின்றன. அன்னாரின் சர்வோதயத் தொண்டு இன்றும் சர்வோதய ஊழியர்களின் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது. அன்னாரின் நினைவு தினத்தை (05. 12. 71 இல்) இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் கொண்டாடிய போது அன்பர்கள் உதவிய நிதியில் 200 ரூபா மீதமாயிருந்தது. இந்நிதியை மேலும் பெருக்கி அன்னாரின் நினைவாக ஆண்டு தோறும் காந்தி அடிகள் பிறந்த தின விழாவின் போது பேச்சுப் போட்டி நடத்திப் பரிசளிக்க அகில இலங்கைக் காந்தி சேவா சங்க-கொழும்புக்கிளை தீர்மானித்துள்ளது.

# செய்திகள்

### கதர் இயக்கம்

இலங்கையில் கதர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காந்தி சேவா சங்கம் பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

### பட்டு உற்பத்தி

இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்திலுள்ள சர்வோதய நிகேதன மாணவர்கள் பட்டு உற்பத்தி தொழிலை தொடங்குவதற்கு முன்னோடியாக முசுக்கொட்டைச் செடியை பயிரிடுகிறார்கள்.

### காந்தி பிறந்த தின விழா

106 ஆவது காந்தி பிறந்த தின விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு அகில இலங்கைக் காந்தி சேவா சங்கக் கொழும்புக்கிளை- ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

9. அப்பொழுது பதினொராம் மணி வேளையில் வேலைக்கமர்த்தப் பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.

10. இவ்விதமாக பிந்தினோர் முந்தினோராயும்; முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள். அழைக்கப் பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

இக்கதையை ஜான்ரஸ்கின் விளக்கியவாறு பிந்தியிருப்பவர்களிடம் தொடங்கி முந்தியிருப்பவர்கள் வரைக்கும் அனைவருக்கும் நல் வாழ்வு தான். சர்வோதயத்தின் குறிக்கோளாகும். தனி நபர் ஒவ்வொருவரும் நல் வாழ்வு நடாத்தும் நிலை வந்தால் தான் சமுதாயம் முழுவதும் நல் வாழ்வடையும். இதில் ஒருவர் கூட நீங்கலில்லாமல் அனைவரும் மேம்பாடு அடைவார்கள் அதில் வர்க்கப் போராட்டம் கிடையாது. மனிதர்கள் எல்லோரும் கடமையுணர்ந்து தமது அண்டை அயலானை நேசித்து அவனுடைய இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டு கடனறி மக்களாக விளங்குவார்கள். ஈத்துவக்கும் இன்பத்தை அடைந்து அறக்காவல் பண்பினர்களாக விளங்குவார்கள். மனிதனை நல்லவன் தீயவன் என்ற பாகுபாட்டிற்கு இங்கு இடமில்லை. தீமையை வெறு. தீமை செய்தவனை வெறுக்காதே என்று காந்தியடிகள் கூறுயிருக்கிறார்கள்.

வாழ்க வையகம்! வளர்க சர்வோதயம்!! அனைவருக்கும் நல் வாழ்வு இயக்கம் அமைப்போம் வாரீர்!!!

—திரு. கு. இராமநாதன்,
காந்தி தத்துவபிரசாரகர்,
தமிழ்நாடு.

# அன்பர் தபால்

வவுனியாவில் சர்வோதய ஊழியர்களின் அடுத்த சந்திப்பு பொருத்தமானதே. எமது கடமைகளை மறவாமல் இருப்பதற்காகவாவது இப்படியான சந்திப்பு அவசியம் தேவை. என்னாலான எல்லா ஒத்துழைப்பும் தர என்றும் தயாராயுள்ளேன்.

யாழ்ப்பாணம் த. விநயகம்

★ ★ ★ ★

சர்வோதய ஊழியர்களின் சந்திப்பை ஏற்படுத்தியமைக்காக எமது மன்றத்தினர் நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது மன்றம் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமென்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

காந்தி இளைஞர் மன்றம் க. பாரதிதாசன்
மட்டக்களப்பு தலைவர்

★ ★ ★ ★

14. 09. 75. அன்று வவுனியாவில் கருத்தரங்கமும் சர்வோதய ஊழியர்களின் சந்திப்பும் ஒழுங்கு செய்வதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அன்றையதினம் நாங்களும் பங்குபற்ற முயற்சி செய்கிறோம்.

யாழ்ப்பாணம் க. கனகராசா
மில்க்வைற்

★ ★ ★ ★

என்னுடைய உடல் நிலை, ஒடி ஆடித்திரிய, றெயில் பஸ் பிராயாணங்கள் செய்ய இடந்தராது. எனினும் 14. 09. 75. இல் வவுனியாவில் நடக்கவிருக்கும் கருத்தரங்கில் பங்கு பற்ற வருகிறேன்.

வட்டுக்கோட்டை முதலியார் -
செ. சின்னத்தம்பி

★ ★ ★ ★

வவுனியாவில் 1975. 09. 14 அன்று ஒழுங்கு செய்யும் சர்வோதய ஊழியர்களின் சந்திப்பில் கலந்து கொள்ள முடியுமென்று எண்ணுகிறேன்.

யாழ்ப்பாணம் கு. நேசையா

### ''காந்தீயம்''

சம்பந்தமான சகல விபரங்களுக்கும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
சர்வோதயநிகேதனம்,
212, 10ஆவது குறுக்குத்தெரு,
இந்துக்கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை. (இலங்கை)

# சர்வோதய நன்னெறி

நமக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது. அடுத்தபடி சந்தோஷம் வேண்டும். அதற்கான வழியைக் கூறுவது தான் சர்வோதயம், சுயராஜ்யம் வந்த பின்னர் சந்தோஷமாக இருப்பதற்கான முயற்சிகளில் இதுவும் ஒன்று. சர்வோதய இயக்கத்தின் முக்கிய நோக்கம் நம்முடைய உள்ளங்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பது. இதற்கு நம் முயற்சி இன்றியமையாதது.

சர்வோதயம் என்பது ஒரு ஸ்தாபனமல்ல. இதற்கென ஒரு அமைப்புக் கிடையாது. திருக்குறளில் பல நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தகப்பனார்- குழந்தைகளுடைய பரஸ்பர அன்பு, வீடுதேடி வந்தவருக்கு விருந்திடல், பொய் பேசக்கூடாது என்பன போன்ற பல நல்ல விஷயங்கள் அதில் போதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு ஸ்தாபனம் உண்டா? கிடையாது. அதுபோல சர்வோதய தத்துவத்துக்கும் ஸ்தாபனம் கிடையாது. தயவு செய்து இதை ஒரு ஸ்தாபனமாக்காதீர்கள். இது ஒரு நன்னெறி ஊட்டும் இயக்கமாகவே இருக்கட்டும்

உலகிலுள்ள அடிப்படையான சாதனங்களை அடைய எல்லோருக்கும் உரிமை உண்டு. ஒருவர் கஷ்டப்பட ஒருவர் சுகமாகஇருப்பது தர்மமல்ல. தண்ணீர், காற்று இதை யாராவது சிலர் வைத்துக் கொண்டு மற்றவர்கள் விலைக்கு வாங்கித்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று யாராவது சொல்ல முடியுமா? நீர், காற்று போல பூமியும் அவசியமானது பயிர்கள் வளர்வது பூமியில்தான். இதைத் தனது என்று வைத்துக் கொண்டு மற்றவர்கள் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும் என்று சொல்வது தவறு. அந்தத்தவறு எப்படியோ ஏற்பட்டு விட்டது. அதனால் தான் இவ்வளவு கஷ்டங்கள். அதைப் போக்குவது தான் சர்வோதய இயக்கம். தாகம் எடுத்தவனுக்குத் தண்ணீர் கிடைப்பது போல பயிற்சியுள்ள விவசாயிக்கு நிலம் கிடைக்க வேண்டும். இது புதிதாக ஏற்பட்ட பிரச்சனையல்ல. மிகவும் பழைய விஷயம். அதனால் இதை மிகக் கவனமாக அணுக வேண்டும்.

**கிழக்கிலங்கை**

# காந்தி இளைஞர் முன்னேற்ற மன்றம்

கிழக்கிலங்கை காந்தி இளைஞர் மன்றத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா 22.07.75 இல் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை தபால்-தந்தி திணைக்கள பதவி உதவியாளர் திரு. து குருசாமி ஐயர் மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்தார். நிகழ்ச்சிகளுக்கு திரு. பொன். சின்னத்துரை தலைமை தாங்கினார். கிழக்கிலங்கை காந்தி இளைஞர் மன்றத் தலைவர் திரு. க. பாரதிதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆண்டறிக்கையை பொருளாளர் திரு. சி. அன்டனி சமர்ப்பித்து, அகில இலங்கை காந்தி சேவா சங்க கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அனுப்பிய வாழ்த்துச் செய்தியையும் வாசித்தார்.

சிறப்புச் சொற் பொழிவு வழங்கிய சைவப் புலவர்- வ.சித்திவினாயகம் அவர்கள் பேசுகையில், நாடகம் பார்த்தே மாநிலம் போற்றும் உத்தமரானார் மகாத்மா. காந்தி அடிகள் பாலிய வயதில் அரிச்சந்திர நாடகம் பார்த்தார். அரிச்சந்திரனைப் போல் சத்திய சீலனாக வாழ்ந்து பாரதமாதாவின் அடிமைத் தளையை அறுத்தெறிந்தவர் என்றார்.

கவிஞர் முத்தழகு பேசுகையில், மகாத்மா காந்தி தமது ஆத்மீக பலத்தால் ஒரு சாம்ராஜ்யத்தையே நிலைகுலையச் செய்தார் என்றும் காந்தி இளைஞர் மன்ற இளைஞர்களைப் போல் எல்லா இளைஞர்களும் ஆத்மீக துறையில் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

திரு. எஸ். பொன்னம்பலம் பேசுகையில், இன்று நாட்டின் சனப்பெருக்கத்தைக் குறைப்பதற்கு குடும்பக் கட்டுப்பாடு அவசியம் என்றார்.

இனிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற பின் திரு. ம. விஜயன் நன்றி கூறினார்

நமது தேசதிற்கென ஒரு பழைய முறை உண்டு. அந்த முறையில் இந்த நிலப்பிரச்சனையைத் தீர்க்கலாம் என்பது தான் சர்வோதயத்தின் யோசனை. ஒரு மனிதனுக்கு நோவு உண்டானால் அதைப் பார்த்துக் கொண்டு இருப்பவனையும் அது பாதிக்கிறது. கஷ்டப்படுகிறவனுக்கு உதவ வேண்டுமென்பது நமது பழமையான தர்மலம்.

—இராஜாஜி

# கிராம சுயராஜ்யம்

இலங்கை கிராமங்கள் நிறைந்த நாடு. கிராமங்கள் மாறினால் நாடு மாறும். கிராமங்கள் செழித்தால் நாடு செழிக்கும். கிராமத்தவர்கள் ஒன்றானால் நேர்மையானவராவார்கள். கிராமத்தில் கிராமத்தவர்கள் ஆட்சி அமையும்.

இன்று நமது தலை விதியை நாம் தான் நிர்ணயம் செய்பவர்களாக இருக்கிறோம். நாடு சுதந்தரமடைந்தது, அதே நேரத்தில் கிராமங்கள் சுதந்தரமடைந்துள்ளதா என்பதைச் சிந்திக்க வேண்டும். கிராமந்தோறும் கிராமசுயாட்சியினை நிறுவ வேண்டும். கிராமவளர்ச்சிக்கு வேண்டியவைகளை கிராமத்தவர்களே கூடிப் பேசி முடிவு செய்ய வேண்டும். கிராம சபைகள் அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் கிராமத்திலேற்படும் சண்டை சச்சரவுகள், வழக்குகள் முதலியவைகள் அங்கேயே தீர்க்கப்படவேண்டும். கள்ளத்தனமாக எதுவும் கிராமத்தில் நடைபெறவிடக் கூடாது. வன்முறை, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் ஆகியவைகளை அகற்றி அன்பை வளர்த்து சகோதர சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதற்கான பணிகளை நாம் கிராமசபை மூலம் செய்ய வேண்டும். கிராமசபை தாய் போல் கிராமத்தைப் பாதுகாக்கும். கிராம ஆட்சி ஏற்படும். கிராமங்கள் நலம் பெறும். நாடும் நலம் பெறுமல்லவா?

## வரப்பெற்றோம்

“மாவலி”
தொழிலாளர் தேசிய சங்க
வெளியீடு,
618 3/3 காலி வீதி,
கொழும்பு-3

★ ★ ★ ★

“அக்னி”
மனிதாபிமானப் படைப்
பாளிகளின் முற்போக்குச்
சிந்தனைக்களம்
33, லொறிஸ் ரோட்,
கொழும்பு- 4

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. Registered at the G. P. O· as a Newspaper in Ceylon